**எயிட்ஸ் கூறின் 09 ஆம் சுற்றுக்கான எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியா ஒழிப்பு உலகளாவிய நிதிய செயற்திட்டம் (ஜீஎப்ஏரீஎம்) - 2013**

எயிட்ஸ் கூறின் 09 ஆம் சுற்றுக்கான எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியா ஒழிப்பு உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் (ஜீஎப்ஏரீஎம்) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியா ஒழிப்பு உலகளாவிய நிதியத்திற்கும் (ஜீஎப்ஏரீஎம்) இடையே கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய எஸ்ஆர்எல்-எஸ்-11-ஜீ13-எச் ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 13(பீ) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்

மானிய உடன்படிக்கையின் படி, செயற்திட்ட நோக்கெல்லையும் செயற்பாடுகளும், பாதீடு, மைல்கற்கள் மற்றும் குறிகாட்டிகள் அடங்கலாக செயற்திட்ட நிறைவேற்றலிற்கும் அமுலாக்கலிற்கும் சுகாதார அமைச்சு பொறுப்பாக உள்ளது. இலங்கையில் எச்ஐவீ/எயிட்ஸ் இனை ஒழித்தல், கட்டுப்படுத்தல் மற்றும் சிகிச்சையளித்தலிற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டச் செயற்பாடுகளை தீவிரப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கையின்படி 6 ஆவது மற்றும் 9 ஆவது சுற்றுக்கான எச்ஐவீ/எயிட்ஸ் கட்டுப்பாட்டுச் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் முறையே ஐ.அ.டொ. 1,300,923 மற்றும் ஐ.அ.டொ. 4,956,930 ஆனதுடன் முழுத் தொகையும் ஜீஎவ்ஏரீஎம் ஆல் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2008 சனவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 06 ஆவது சுற்று 2010 திசெம்பர் 31 அளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளதுடன் 09 ஆவது சுற்று 2015 திசெம்பர் 31 அளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தல்களினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும்

மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள செலவினங்கள் மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகளுடனும் செயற்திட்டத்தினால் பராமரிக்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கைகளுடனும் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

--------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல்

உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 82,354,428 (ஐ.அ.டொ. 636,901) ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 346,562,163 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்பட்டுகின்றது.

| வகுதி | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|---|
| | 2013 | | 2012 | | |
| | ஐ.அ.டொ. | ரூபா | ஐ.அ.டொ. | ரூபா | ரூபா |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 79,127 | 10,345,861 | 246,842 | 31,388,458 | 62,234,301 |
| எச்ஐவீ/ எயிட்ஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 557,774 | 72,008,567 | 620,153 | 79,131,478 | 284,327,862 |
| | 636,901 | 82,354,428 | 866,995 | 110,519,936 | 346,562,163 |

### 4.2 காசுப் பாய்ச்சல் கூற்று

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, காசுப்பாய்சல் கூற்று நிலைமை கீழே தரப்படுகின்றது.

| | 2013 ஆம் ஆண்டிற்கானது | | 2012 ஆம் ஆண்டிற்கானது | |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொ. | ரூபா | ஐ.அ.டொ. | ரூபா |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பய்ச்சல்** | | | | |
| வெளிநாட்டு உதவியிலிருந்து கிடைத்த காசு (வாக்குப்பண பேரேடு-13) | 526,723 | 68,000,000 | 916,928 | 117,000,000 |
| உள்நாட்டு நிதிகளுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு உதவிகள் (வாக்குப்பண பேரேடு- 17) | 77,459 | 10,000,000 | 78,370 | 10,000,000 |
| கேள்வியாளர்களிடமிருந்து பெறப்பட்ட காசு | | - | 435 | 55,500 |
| நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலுத்தப்பட்ட காசு | (557,774) | (72,008,567) | (620,153) | (79,131,477) |
| வேறுபாடு | 2 | 2 | | - |
| முற்பணங்கள் (தேறிய)<br>மீளளிக்கப்படத்தக்க வைப்புக்கள் | 69,925 | 9,141,188<br>1,500 | | (6,860,451) |
| அந்நியச் செலாவணி நட்டம்/இலாபம் | (586) | | 1,300 | - |
| செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு | 115,749 | 15,134,121 | 322,928 | 41,063,572 |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | |
| நிலையான சொத்துக்கள் | (79,127) | (10,345,861) | (246,842) | (31,388,458) |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | (79,127) | (10,345,861) | (246,842) | (31,388,458) |
| **நிதி நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| பொது திறைசேரிக்கு மீளளிக்கப்பட்ட காசு | (36,621) | (4,788,260 | (76,086) | (9,675,114) |
| **காசில் தேறிய அதிகரிப்பு** | - | - | - | - |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்கின் படி, எச்ஐவீ/எயிட்ஸ் ஒழித்தல் நோக்கங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட 5 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் ரூபா 3,376,433 ஆனதோர் தொகை செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தினால் பராமரிக்கப்பட்ட பதிவேடுகளின் படி, அவற்றின் மீதான செலவினம் ரூபா 2,740,036 ஆக இருந்தது.

(ஆ) கணக்கின் படி, ''நடத்தை மாற்றத்திற்கான சிறைச்சாலை வதிவோர் நெருங்கிய கண்காணிப்பு கல்வியாளர்'' மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 529,786 ஆனதோர் தொகை செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் பயிற்சிப்

பிரிவினால் பராமரிக்கப்பட்ட பதிவேடுகளின் படி, அவற்றின் மீதான செலவினம் ரூபா398,625 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 135 மற்றும் 2013 சனவரி 21 ஆந் திகதிய எஸ்எவ்ஏ/01/2013 ஆம் இலக்க சுகாதார அமைச்சின் சுற்றறிக்கை | செயற்திட்டப் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்படத்தக்க கொடுப்பனவுக்கான அதிகார எல்லை ரூபா 2,000,000 ஆகும். இருப்பினும் மேற்குறிப்பிட்ட அதிகார எல்லைக்கு முரணாக 08 சந்தர்ப்பங்களில் ரூபா 42,257,936 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் செயற்திட்டப் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2014 ஒக்தோபரில் சுகாதார அமைச்சுச் செயலாளரினால் பிந்திய அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 371(2) | பெறப்பட்ட முற்பணங்கள் எந்த நடவடிக்கைகளிற்காக வழங்கப்பட்டனவோ அந்த நோக்கங்கள் பூர்த்தியான பின்னர் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 43 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 13,555,268 மொத்தமான முற்பணங்கள் 02 முதல் 12 மாத கால வீச்செல்லைகொண்ட தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (iii) நிதிப்பிரமாணம் 756 மற்றும் 2002/11/28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்காக ரூபா 62,234,301 பெறுமதியான நிலையான சொத்துக்கள் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை |

### 5.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 8,661,211 கிரயமான இரண்டு நுகர்வுப் பொருள் விடயங்களினதும் ஆய்வுகூட உபகரணங்களினதும் இறக்குமதிக்காக அழகுசாதனப் பொருட்கள் ஔடதங்கள் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எச்ஐவீ.எயிட்ஸ் ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஏற்பட்ட ரூபா 3,815,724 கூட்டுத்தொகையான செலவினங்களிற்கான மூன்று தீர்ப்பனவு உறுதிச்சிட்டைகளும் தொடர்புடைய ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2013 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | ஆண்டின்போது கிடைத்த நிதிகள் | | ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | | 2013 திசெம்பர் 31 வரை நிதிகளின் பயன்பாடு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். |
| ஜீஎவ்ஏரீஎம் | 4.956 | 629.46 | 192.15 | 0.526 | *92.96 | 0.70 | *66.54 | 1.973 | 246.45 |
| ஜீஓஎஸ்எல் | | | | | 10.00 | | | | |
| | 4.956 | 629.46 | 192.15 | 0.526 | 102.96 | 0.70 | 66.54 | 1.973 | 246.45 |

* ரூபா 24.96 மில்லியன் நேரடி நிதியளித்தல்களும் உள்ளடங்கியுள்ளது.

ரூபா 101 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொ. 0.779 மில்லியன் தொகை மீளாய்வாண்டில் பொதுத் திறைசேரியினால் பெறப்பட்டிருந்த போதிலும், ரூபா 68 மில்லியன் தொகை மாத்திரமே செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 66.54 மில்லியன் மாத்திரம் செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தின் விபரமான வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் உலகளாவிய நிதியத்தினால் 2011 முதல் 2013 வரையான காலத்தில் ஐ.அ.டொ. 3 மில்லியன் தொகையை விடுவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 வரை அதில் ஐ.அ.டொ. 2.78 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது. 60 சதவீத செயற்திட்டக் காலம் முடிவுற்றதன் பின்னர் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டம் அதில் ஐ.அ.டொ. 1.97 மில்லியனை பயன்படுத்தியிருந்தது. ஆகையால் மானியத்தில் எஞ்சியுள்ள ஐ.அ.டொ. 2.9 மில்லியன் தொகையை மீதமாகவுள்ள 24 மாதங்களில் பயன்படுத்தப்பட முடியுமா என்பது ஐயத்திற்குரியதாகும்.

### 6.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் 20 செயற்பாடுகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 54,040,063 கூட்டுத்தொகையான ஒதுக்கீடுகள் குறித்துரைத்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், உரிய அதிகாரத்தரப்பினர்களின் அங்கீகாரமின்றி ஏனைய 07 செயற்பாடுகளிற்காக ரூபா 18,310,076 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதில், ரூபா 976,059 தொகை வருடாந்த செயற்திட்ட பாதீட்டில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத 02 செயற்பாடுகளிற்காக செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டில் 16 செயற்பாடுகளிற்காக ரூபா 64,099,989 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 வரை ரூபா 9,418,058 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) கிடைத்திருந்த மொத்த மானியத் தொகையில் குறித்துரைத்த செயற்திட்ட நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாதிருந்த ரூபா 4,788,260 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் பொதுத் திறைசேரிக்கு மீளளிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பதிவுக் கட்டணத்தை செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக தாய்லாந்தில் இடம்பெற்ற பயிற்சி செயலமர்வுக்காக ரூபா 93,485 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) பொருட் கொள்வனவுகள்
(ஆ) இருப்புக்கள்
(இ) நிதிகளைப் பயன்படுத்தல்
(ஈ) கட்டுநிதி மற்றும் முற்பணங்களைத் தீர்த்தல்
(உ) கணக்கீடு